பொருளடக்கம்



குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

ஒரு நபியின் மரணம் என்றால் ... 23

முஸ்லிம் சமூகத்தில் நபிகளார் ﷺ
மரணத் துக்கத்தின் தாக்கங்கள் 36

1 துன்பங்கள் அனைத்திலும் பெரிய துன்பம்
நபிகளாரின் மரணம்தான் 39

2 சொந்தங்கள், நேசர்கள் யாரையும் விட நமக்கு அதிக
நன்மைகளை விட்டுச் சென்றார்கள் நம் நபி ﷺ 44

3 நபியவர்கள் மரணித்த சமயம் நபித்தோழர்கள் மத்தியில்
எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்புகள் 46

4 உம்மு அய்மனின் ؓ கண்ணீரும்
அபூபக்ர் ؓ, உமர் ؓ அதில் கரைந்ததும் 52

5 நபிதான் நபித்தோழர்களுக்குப் பாதுகாப்பு 54

6 நபியவர்களது மரணம் ஒரு துன்பமல்ல
என்போருக்கு மறுப்பு 57

7 நபி ﷺ அவர்களது மரணத்திற்குப் பின் ... 60

ஒரு நபியின் மரணம் என்றால் ...

உஸ்தாத் அபூ நசீபா எம்.எஃப். அலீ

❀

ஒரு நபியின் மரணம் என்றால், மனிதர்களில் மிகச் சிறந்த, மிக மேன்மையான, மிகவும் நேசத்திற்குரிய ஒருவரின் மரணம். அந்த மரணத்தின் ரணத்தை, வலியைப் புரிந்துகொள்ள அவர் யார், எவ்வளவு சிறந்தவர், எவ்வளவு மேன்மையானவர், எவ்வளவு நேசத்திற்குரியவர் என்பதைப் புரிய வேண்டும். நபியைத் தெரியாதவர், அல்லது அவரின் பெயரை மட்டும் கேள்விப்பட்டவர், அவரின் மரணத் துக்கத்தை அனுபவிப்பது சாத்தியமே இல்லை.

ஒரு முக்கிய விஷயத்திலிருந்து தொடங்குவோம். உங்களையும் என்னையும் எல்லாரையும் படைத்த ஒரே இறைவன், அல்லாஹ் தான். அவன் உங்களுக்காகவும் எனக்காகவும் எல்லாருக்காவும் அனுப்பிய உலகளாவிய தூதர் நபி முஹம்மது ﷺ அவர்கள் தாம். அவர்களுக்கு முன்பு எத்தனையோ தூதர்கள் வந்தார்கள். ஆனால், அவர்களுக்குப் பின்பு எந்தத் தூதரும் வரமாட்டார்கள். ஒரு மனிதர், இறைவனுக்குத் தூதராகிற தகுதி நபி முஹம்மதுடன் முடிந்துவிட்டது. ஆமாம், 1400 ஆண்டுகளுக்கு முன்பு நபிகளாரின் சுவாசம் நின்றுவிட்டபோது, இந்தப் பூமியின் மீது இறைத்தூதர்கள் நடமாடுவது நின்றுவிட்டது. இனி இறைத்தூதர் என்று யாருமே வரப்போவதில்லை.

இவ்வளவு முக்கியமான ஒருவரை இழந்த துயரம், சிலருக்குச் சாதாரணமாகத் தெரிய காரணம் என்ன தெரியுமா? அவர்கள் அவரின் ஈரமுள்ள இதயத்தைத் தெரியாதவர்கள். அவர்களின் நல்வாழ்க்கைக்காக அவர் உருகி கண்ணீர் சிந்தியதைக் காணாதவர்கள். நெருப்பில் அவர்கள் விழுந்திடக் கூடாது என்பதற்காக அவர் போராடியதைப் புரியாதவர்கள். தங்களின் உண்மையான நலம் விரும்பியை உணராதவர்கள். தாங்கள் சுதந்திரமாக சுவாசிக்கவும், தன்மானத்துடன் நடக்கவும், வாழ்வுரிமை பெறவும் அவரின் எழுச்சிதான் மூலகாரணம் என்பதைக் கண்டுகொள்ளாதவர்கள்.

1

துன்பங்கள் அனைத்திலும் பெரிய துன்பம் நபிகளாரின் மரணம்தான்

❀

நபித்தோழர் இப்னு அப்பாஸ் ﷺ அவர்களும் சாபித் அல்ஜுமஹீ ﷺ அவர்களும் நபிகளார் ﷺ சொன்னதாகச் சொல்கிறார்கள்:

إِذَا أَصَابَ أَحَدَكُمْ مُصِيبَةٌ فَلْيَذْكُرْ مُصِيبَتَهُ بِي فَإِنَّهَا مِنْ أَعْظَمِ الْمَصَائِبِ

உங்களில் யாராவது துன்பத்தில் சிக்கினால், அவர் என்னுடைய (மரணத்)தைக் கொண்டு தமது துன்பத்தை நினைத்துப் பார்க்கட்டும். நிச்சயம் அது துன்பங்களிலெல்லாம் மிகப் பெரியது. (சுனன் அத்தாரமீ 84, ஸஹீஹுல் ஜாமிஉ 348)

நபிகளார் ﷺ மரணம் முஸ்லிம் சமுதாயத்திற்கு மகா துக்கமாக அமையும் அல்லது அமைந்துவிட்டது என்பதை இந்த நபிமொழி எவ்வளவு தெளிவாக நமக்குச் சொல்கிறது!

நபிகளார் ﷺ நமக்கொரு வேண்டுகோள் வைக்கிறார்கள்.

நம்முடைய கஷ்டங்கள், துயரங்களின்போது அவர்களது மரணத்தை நினைத்துப் பார்க்க வேண்டும்; அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனதை நினைக்கவேண்டும் என்கிறார்கள்.

அப்படி நினைத்தால் என்ன நடக்கும்? அவர்களின் மரணத்துடன் ஒப்பிட்டால் நம்முடைய துயரங்களெல்லாம் ஒன்றுமே இல்லை என்றாகிவிடும். நமது சொந்தங்களையோ, அன்பிற்குரியவர்களையோ இழந்தால் நமக்கு எவ்வளவு கவலை வருகிறது! பிரிவின் துயரத்தில் எவ்வளவு வருந்துகிறோம்!

இப்போது ஒரு கேள்வி.

- இப்படிப்பட்ட உணர்ச்சிகளும் எண்ணங்களும் நபிகளாரின் மரணத்தை நினைத்து நமக்கு ஏற்பட்டதுண்டா?

2

சொந்தங்கள், நேசர்கள் யாரையும் விட நமக்கு அதிக நன்மைகளை விட்டுச் சென்றார்கள் நம் நபி ﷺ

❀

நம்மை நேசிப்பவர்கள், நமது நேசத்திற்குரியவர்கள், நம்முடைய சொந்தங்கள் நமக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கலாம். பாசம் காட்டியிருக்கலாம், பாதுகாத்திருக்கலாம், பெருந்தன்மை யோடு நடந்திருக்கலாம்.

ஆனால், இவையெல்லாம் நபியவர்கள் நம்மிடம் காட்டிய அற்புதப் பாசத்திற்கும் அன்பிற்கும் பாதுகாப்பிற்கும் முன் ஒன்றுமே இல்லை, ஒப்பிட முடியாது. காரணம், அவர்கள் நமக்கு மகிழ்ச்சியை அடையும் பாதையைக் காட்டிக் கொடுத்தார்கள். என்னவெல்லாம் நமக்கு நன்மையோ, அத்தனையையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

தீமையும் நஷ்டமும் கொண்ட எல்லாப் பாதைகள் பற்றியும் நமக்கு எச்சரிக்கை செய்தார்கள். அது இவ்வுலகிலோ, மறுமையிலோ எங்கிருந்தாலும் சரி. சொல்லுங்கள், நமது சொந்தத்திலோ, நண்பர் களிலோ, நேசர்களிலோ யாராவது இப்படிப்பட்ட நன்மையை நமக்குச் செய்திருக்கிறார்களா? இதை மனதில் நன்கு நிறுத்துங்கள். இது உங்களுக்கு நபியை இழந்த துயர நிகழ்ச்சியின் உண்மை அனுபவத்தைக் கொடுக்கும். அதற்கு உதவும். இன்னும் கொஞ்சம் போவோம்.

நபி ﷺ காட்டிய நேர்வழியின் அருமை, என்றென்றுமாக அவர் கள் நமக்கு விட்டுச் சென்ற சொத்தின் அருமை நமக்குத் தெரிய வேண் டுமல்லவா? அதற்கு சில கேள்விகளை எழுப்பிக்கொள்வோம்.

- நீங்கள் நரக நெருப்பில் தள்ளப்பட்டால் எப்படியிருக்கும்?
- சொர்க்கத்திலிருந்து துரத்தப்பட்டால் எப்படியிருக்கும்?
- மண்ணறையில் தண்டிக்கப்பட்டால் எப்படியிருக்கும்?

3

நபியவர்கள் மரணித்த சமயம் நபித்தோழர்கள் மத்தியில் எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்புகள்

❀

நபி ﷺ அவர்கள் மரணித்தபோது நபித்தோழர்களின் மனநிலை எப்படியிருந்தது? அவசியம் அறிய வேண்டிய விஷயம்.

عَنْ سَالِمِ بْنِ عُبَيْدٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ أُغْمِيَ عَلَى رَسُولِ اللهِ صلى الله عليه وسلم فِي مَرَضِهِ فَأَفَاقَ فَقَالَ حَضَرَتِ الصَّلاةُ ؟ قَالُوا نَعَمْ فَقَالَ مُرُوا بِلالا فَلْيُؤَذِّنْ وَمُرُوا أَبَا بَكْرٍ فَلْيُصَلِّ لِلنَّاسِ أَوْ بِالنَّاسِ ثُمَّ أُغْمِيَ عَلَيْهِ فَأَفَاقَ فَقَالَ حَضَرَتِ الصَّلاةُ ؟ قَالُوا نَعَمْ قَالَ مُرُوا بِلالا فَلْيُؤَذِّنْ وَمُرُوا أَبَا بَكْرٍ فَلْيُصَلِّ بِالنَّاسِ ثُمَّ أُغْمِيَ عَلَيْهِ فَأَفَاقَ قَالَ حَضَرَتِ الصَّلاةُ ؟ قَالُوا نَعَمْ قَالَ مُرُوا بِلالا فَلْيُؤَذِّنْ وَمُرُوا أَبَا بَكْرٍ فَلْيُصَلِّ بِالنَّاسِ فَقَالَتْ عَائِشَةُ رَضِيَ اللَّهُ عَنْهَا إِنَّ أَبِي رَجُلٌ أَسِيفٌ إِذَا قَامَ ذَلِكَ الْمَقَامَ يَبْكِي فَلاَ يَسْتَطِيعُ فَلَوْ أَمَرْتَ غَيْرَهُ قَالَ ثُمَّ أُغْمِيَ عَلَيْهِ فَأَفَاقَ فَأَمَرَ بِلالا فَأَذَّنَ وَأَمَرَ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ فَصَلَّى بِالنَّاسِ ثُمَّ إِنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم وَجَدَ خِفَّةً فَقَالَ انْظُرُوا لِي مَنْ أَتَكِئُ عَلَيْهِ فَجَاءَتْ بَرِيرَةُ وَرَجُلٌ آخَرُ فَاتَّكَأَ عَلَيْهِمَا فَلَمَّا رَآهُ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ هَمَّ ذَهَبَ لِيَنْكِصَ فَأَوْمَى إِلَيَّ أَنِ اثْبُتْ مَكَانَكَ حَتَّى قَضَى أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ صَلاتَهُ ثُمَّ إِنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قُبِضَ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَاللَّهِ لا أَسْمَعُ أَحَدًا يَذْكُرُ أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قُبِضَ إِلا ضَرَبْتُهُ بِسَيْفِي هَذَا قَالَ وَكَانَ النَّاسُ أُمِّيِّينَ لَمْ يَكُنْ فِيهِمْ نَبِيٌّ قَبْلَهُ قَالَ فَأَمْسَكَ النَّاسُ وَقَالُوا يَا سَالِمُ انْطَلِقْ إِلَى صَاحِبِ رَسُولِ اللهِ صلى الله عليه وسلم فَادْعُهُ فَأَتَيْتُ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ وَهُوَ فِي الْمَسْجِدِ فَأَتَيْتُهُ أَبْكِي دَهِشًا فَلَمَّا رَآنِي قَالَ قُبِضَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم ؟ فَقُلْتُ إِنَّ عُمَرَ يَقُولُ لا أَسْمَعُ أَحَدًا يَذْكُرُ أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قُبِضَ إِلا ضَرَبْتُهُ بِسَيْفِي هَذَا فَقَالَ انْطَلِقْ فَانْطَلَقْتُ مَعَهُ وَجَاءَ

4

உம்மு அய்மனின் ﵂ கண்ணீரும் அபூபக்ர் ﵁, உமர் ﵁ அதில் கரைந்ததும்

❀

அனஸ் ﵁ சொல்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் இறப்புக்குப் பின், அபூபக்ர் ﵁ அவர்கள் உமரிடம் ﵁, "நம்மை உம்மு அய்மனிடம் அழைத்துச் செல்லுங்கள். அவர்களை அல்லாஹ்வின் தூதர் சந்தித்து வந்ததைப் போன்று நாமும் சந்தித்து வருவோம்" என்று சொன்னார்கள்.

அவ்வாறே (நபியவர்களின் வளர்ப்புத் தாய்) உம்மு அய்மன் ﵂ அவர்களிடம் நாங்கள் போனபோது, அவர்கள் அழுதார்கள். அப்போது, அவர்கள் இருவரும், "ஏன் அழுகிறீர்கள்? அல்லாஹ் விடம் இருப்பது அவனுடைய தூதர் அவர்களுக்குச் சிறந்ததா யிற்றே?" என்று கேட்டார்கள். அதற்கு உம்மு அய்மன் ﵂,

مَا أَبْكِي أَنْ لاَ أَكُونَ أَعْلَمُ أَنَّ مَا عِنْدَ اللَّهِ خَيْرٌ لِرَسُولِهِ وَلَكِنْ أَبْكِي أَنَّ الْوَحْيَ قَدِ انْقَطَعَ مِنَ السَّمَاءِ

"அல்லாஹ்விடம் இருப்பது அவனுடைய தூதருக்குச் சிறந்தது என்பதைத் தெரியாமல் நான் அழவில்லை. ஆனால், (அவர்களின் இறப்பால்) வானத்திலிருந்து வஹ்யி[1] வருவது நின்றுவிட்டதே..!"

---

1 மொழி வழக்கில் வஹ்யி (وحي) என்றால் இரகசியமான தகவல் பரிமாற்றம், வெளிப்பாடு எனப் பொருள்படும். இஸ்லாமிய வழக்கில் இதன் பொருள், அல்லாஹ் தன்னுடைய தூதர்களில் ஒருவருக்கு தன் வார்த்தைகளை அறிவித்து வழிகாட்டும் முறை என்பதாகும். இமாம் இப்னுல் கய்யிம் ﵀ இதனை ஏழு வகைப்படுத்துகிறார்கள். 1. உண்மையான கனவு, 2. வானவர், நபி ﷺ அவர் களின் கண்முன் தோன்றாமல் உள்ளத்தில் செய்தியைப் போடுவது, 3. வானவர், ஓர் ஆண் உருவத்தில் தோன்றி நபியவர்களிடம் பேசுவது, 4. வானவர் மணியோசையைப் போன்று வருவது, 5. வானவர் தம் சுய உருவத்தில் தோன்றி

6

நபியவர்களது மரணம் ஒரு துன்பமல்ல என்போருக்கு மறுப்பு

❀

"நம்மிடம்தான் அல்லாஹ்வின் வேதம் இருக்கிறதே.. இதோ, நபிவழியும் பாதுகாப்பாக உள்ளதே? அப்படியிருக்கும்போது நபியவர்களது மரணத்தைப் பற்றிப் பயப்பட என்ன இருக்கிறது?"

இப்படிக் கேட்பவர்கள் உண்டு. இதற்குப் பின்வரும் நபிமொழி பதில் சொல்கிறது. ஜியாது இப்னு லுபைது ﷺ சொல்கிறார்கள்:

ذَكَرَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وسَلَّمَ شَيْئًا فَقَالَ ذَاكَ عِنْدَ أَوَانِ ذَهَابِ الْعِلْمِ قُلْتُ يَا رَسُولَ اللهِ وَكَيْفَ يَذْهَبُ الْعِلْمُ وَنَحْنُ نَقْرَأُ الْقُرْآنَ وَنُقْرِئُهُ أَبْنَاءَنَا وَيُقْرِئُهُ أَبْنَاؤُنَا أَبْنَاءَهُمْ إِلَى يَوْمِ الْقِيَامَةِ قَالَ ثَكِلَتْكَ أُمُّكَ زِيَادُ إِنْ كُنْتُ لأَرَاكَ مِنْ أَفْقَهِ رَجُلٍ بِالْمَدِينَةِ أَوَلَيْسَ هَذِهِ الْيَهُودُ وَالنَّصَارَى يَقْرَؤُونَ التَّوْرَاةَ وَالإِنْجِيلَ لاَ يَعْمَلُونَ بِشَيْءٍ مِمَّا فِيهِمَا

நபி ﷺ அவர்கள் ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டு, "அதுதான் கல்வி அகற்றப்படும்போது நடக்கும்" என்றார்கள். நான், "அல்லாஹ்வின் தூதரே! கல்வி எப்படி அகற்றப்படும்? நாங்கள்தான் குர்ஆனை ஓதிக்கொண்டிருக்கிறோமே? எங்கள் குழந்தைகளுக்கும் அதைக் கற்றுக் கொடுக்கிறோமே? இப்படி ஒவ்வொரு தலைமுறையும் தங்கள் குழந்தைகளுக்கு மறுமைநாள் வரை கற்றுக்கொடுப்பார்களே? பிறகு எப்படி கல்வி அகற்றப்படும்?" என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள்: "ஜியாதே! உன் தாய் உன்னை இழக்கட்டும். மதீனாவில் உள்ள மனிதர்களில் மார்க்க விளக்கம் கொண்ட ஒருவராக உன்னை நான் கருதிக் கொண்டிருந்தேன். யூதர்களும் கிறித்தவர்களும் தவ்றாத்தையும் இன்ஜீலையும் ஓதி வருவதை நீ பார்க்கவில்லையா? ஆனாலும், அவர்கள் அதிலுள்ள எதையும் தங்களுக்குள் செயல்படுத்துவதில்லை." (சுனன் இப்னுமாஜா 4048, ஸஹீஹ் இப்னுமாஜா 3272)

7

நபி ﷺ அவர்களது மரணத்திற்குப் பின் ...

❀

நபி ﷺ அவர்கள் மரணித்துவிட்டார்கள்.

கண்கள் கண்ணீரைச் சிந்தின.

உள்ளம் அதிர்ந்துபோயிருக்கிறது.

சரி, இப்போது என்ன செய்ய வேண்டும்? அல்லாஹ்வின் வேதத்தையும் நபியவர்களின் வழிமுறையையும் செயலில் கொண்டு வர வேண்டும். வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

யூதர்களும் கிறித்தவர்களும் வழிகெட்டுப் போனதற்கு நபியவர்கள் சொன்ன காரணம் என்ன? ஆம், அவர்கள் தவ்றாத்தையும் இன்ஜீலையும் செயலில் கொண்டுவரவில்லை.

எனவே, நாம் எந்த ஒரு செய்தியையும் நன்கு ஆராய்ந்து, அது ஆதாரப்பூர்வமானதுதானா என்று பார்த்து ஏற்க வேண்டும். ஆதாரமற்றதை விட்டுவிட வேண்டும். ஏனென்றால், இந்தச் செய்திதான் மார்க்கம், சட்டம். அதனால், நாம் எவரிடமிருந்து மார்க்கத்தைப் பெறுகிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். மார்க்கத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மார்க்க அறிஞர்களின் சபைகளில் பங்கெடுக்க வேண்டும்.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் ﵀ அவர்கள் அழகான அறிவுரை ஒன்றை அபூபக்ர் இப்னு ஹஸ்ம் ﵀ அவர்களுக்கு எழுதியனுப்பினார்கள். அதைச் சிந்திப்போம்:

“அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைப் பற்றிய ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி, அவற்றை எழுதியும் வையுங்கள். மார்க்கக் கல்வி மறைந்து கொண்டிருப்பதையும் அறிஞர்கள் இறந்து கொண்டிருப்பதையும் பார்த்து நான் பயப்படுகிறேன். நபியவர்களின் ஹதீஸ்களை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள். (மற்